பொறியியல் பட்டம், B.E. (Civil) Dip (Civil/Agri.), பட்டயம் மற்றும் சமூகவியல் M.A. (Socio)/ M.S.W. பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு கல்வித் தகுதியோடு மாநிலம் முழுவதும் இத்திட்டத்தில் 296 நபர்கள் 14 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு மதிப்பூதியம் தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ.4,500 மற்றும் பயணப் படி ரூ.900 சேர்த்து, மொத்தம் ரூ.5,400 ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஊதிய உயர்வு தற்போதைய ஆட்சியில் ரூ.3,000-ல் இருந்து உயர்த்தி வழங்கப்பட்டது. அரசு விலைவாசி உயர்வுக்கேற்ப அவ்வப்போது அறிவிக்கும் எந்தவித ஊதிய உயர்வும் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. தற்போது ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.ஆர். சுந்தரம், உரையாற்றியது போதும். வேறு ஏதாவது கோரிக்கை இருந்தால் அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நாளை பதிலுரை வழங்குவார்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. அடுத்த matter–க்குப் போக வேண்டும். உட்காருங்கள் (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதிக்காக நான் வைத்த கோரிக்கைகளைத் தமிழக அரசு பரிசீலனை செய்து, என் தொகுதி மக்களின் நலன் காக்க தமிழக முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும், தமிழக அரசின் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. வீரபாண்டியார் அவர்களும் ஆவன செய்யவேண்டுமென்று அன்போடு கேட்டு, எங்கள் மூப்பனார் அய்யா அவர்கள் சொன்னதைப்போல, வளமான தமிழகத்தையும், ஒரு வலிமையான பாரதத்தையும் உருவாக்குவோம் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

2. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (13–4–2010) வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32–ஐ 13–4–2010 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

13–4–2010 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (13–4–2010) செவ்வாய்க்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

55. 2008–2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் பன்னிரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

56. 2008–2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)